அரசினர் தனித் தீர்மானங்கள்

(பேரவைத் தலைவர்)

தமிழ்நாடு மின்சார வாரியம் தனது மூலதனச் செலவுக்குத் தனது நிதிவாயிலிலிருந்தும், வெளிச்சந்தைக் கடன்களிலிருந்தும் தொகை பெறுகிறது. மேலும் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமும் வணிக வங்கிகளிடமும் கிராமப்புற மின் வசதிக் கழகம் மூலமும் கடன் தொகை பெறுகிறது. எஞ்சிய தொகையை மாநில அரசுக் கடன் மூலம் பெறுகிறது. தமிழ்நாடு மின்சார வாரியம் திரட்டிய பல்வேறு கடன்களில் திருப்பிக் கொடுக்கப் படாமல் 1986 பிப்ரவரி திங்கள் இறுதிவரை எஞ்சியுள்ள மொத்த நிலுவைத் தொகை ரூ. 551.14 கோடியாகும். 1986–87-ம் அதற்கு அடுத்து வரும் ஆண்டுகளிலும் திரட்டக் கருதியுள்ள வெளிச்சந்தைக் கடன்கள் மற்றக் கடன்கள் ஆகியவற்றின் அளவைக் கொண்டு பார்க்கும் பொழுது தற்பொழுதுள்ள அறுநூறு கோடி ரூபாய் என்கிற மேல் வரம்பு உயர்த்தப்பட வேண்டும். ஆகவே, மாநில அரசு மாநிலச் சட்டமன்ற பேரவையின் இசைவுடன் தமிழ்நாடு மின்சார வாரியம் கடன் வாங்கக்கூடிய மேல் வரம்பை அறுநூறு கோடியிலிருந்து எண்ணூறு கோடி ரூபாயாக உயர்த்தத் திட்டமிட்டுள்ளது.

தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

7. தகவல் கோரல்.

கார்த்திகேயன் குழு அறிக்கை வெளியிடுதல் குறித்து.

திரு. என். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் தமிழக அரசினால், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர் பிரச்சினை குறித்து ஒரு நபர் குழு என்று சொல்லி திரு. கார்த்திகேயன் அவர்களை நியமித்து, அதனுடைய விசாரணை முடியப்பெற்று, அரசுக்கு அறிக்கை வந்திருப்பதாக அறிகிறேன். அது குறித்து சட்டமன்றக் கூட்டம் முடியும் நேரத்தில் அவை முன்னவர் நாவலர் அவர்கள் விளக்கம் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நபர் குழுவினுடைய அறிக்கையை இன்று பகல் 12 மணி அளவுக்கு திரு. கார்த்திகேயன் அவர்கள் என்னிடத்திலே தந்து இருக்கிறார்கள். அரசு அது பற்றி ஆராயும். ஆராய்ந்ததற்குப் பிறகு அமைச்சரவைக்கு இந்த அரசினுடைய பரிந்துரைகள் செல்லும். பிறகு அமைச்சரவை முடிவு செய்ததற்குப் பிறகு அது வெளியிடப்படும். அதுவரையில் அந்த ஒரு நபர் குழுவினுடைய சிபாரிசுகள் என்ன என்று வெளியிடப்படமாட்டாது.

திரு. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 22 சட்டமன்ற

அறிவிப்புகள்

[திரு. கு. தமிழரசன்]

உறுப்பினர்கள் கூட கையெழுத்திட்டு. உங்களிடத்தில் ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறோம். நடந்து முடிந்திருக்கிற உள்ளாட்சித் தேர்தல்கள் செல்லுமா, செல்லாதா.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஏற்கெனவே சொன்னேன். பெரிய சட்டப்பிரச்சினை இருக்கிறது (குறுக்கீடு). அது வேண்டாம். சபைக் கூட்டம் முடியும் நேரத்தில், மகிழ்ச்சியோடு அமருங்கள் (குறுக்கீடு).

(5) அறிவிப்புகள்.—தொடர்ச்சி.

(ஆ) கூட்டத் தொடரில் நடைபெற்ற அலுவல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மேதகு ஆளுநர் அவர்கள் 8–1–1986ஆம் நாளன்று இரு அவை உறுப்பினர்களும் கலந்து கொண்ட கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றினார்கள்.

8ஆவது சட்ட மன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டம் தொடங்கியதிலிருந்து அதாவது 8–1–1986 முதல் இன்றுவரை பேரவை கூடிய மொத்த நாட்கள்	53 நாட்கள்
மாலையிலும் பேரவை கூடிய நாட்கள் ..	8 நாட்கள்.
அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம்	265 மணி 10 நிமிடங்கள்.
ஆளுநர் உரை மீது விவாதம் நடைபெற்ற நாட்கள்	6 நாட்கள்.
பங்குகொண்ட உறுப்பினர்கள்	55

(பிற்பகல் 1-50)

நிதி அலுவல்கள்:

1986–87ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் பேரவையில் அளிக்கப்பெற்ற நாள் ..	17–3–1986
வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள்	8
பங்குகொண்ட உறுப்பினர்கள்	72